IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.39 /2024

dated : 05.03.2025

P.W.1

Name: ஜெயா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

எதிர்வழக்குரை விவரங்களை நான் படித்துக் கேட்டு தெரிந்து கொண்டேன். 1,2 பிரதிவாதிகள் என் இளைய சகோதரர்கள். என் தந்தை 20 வருடங்களுக்கு முன்பு இறந்துபோனார் தேதி ஞாபகமில்லை. என் தந்தை உயிருடன் இருந்தபோதே வாதிக்கும் 3ம் பிரதிவாதிக்கும் திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். அவர் உயிருடன் இருந்தபோதே எங்களுக்கு போதிய சீர்வரிசை செய்து திருமணம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. அவர் எங்களை திருமணம் செய்து கொடுக்கும்போது வருமானம் ஏதும் இல்லாமல் வறுமையில் வாடிவந்தார். என் சகோதரர்கள் 1,2 பிரதிவாதிகள் அப்போது வேலை செய்து வருமானம் ஈட்டினார்களா என்றால் இல்லை. எங்கள் திருமணத்திற்கு பின்னர் என் தம்பிகள் வழக்குரை சொத்தில்தான் என் தந்தையுடன் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். என் தந்தையை 1, 2 பிரதிவாதிகள் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. என் தந்தையை 1, 2 பிரதிவாதிகள் பராமரித்து வந்தார் என்றும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால்

சரியல்ல. சாமி ஆசாரி மகன் இராமசாமி ஆசாரி என்று 2, 3 நபர்கள் உள்ளார்கள். இராமசாமி ஆசாரி மகன் இலட்சுமணன் என் அத்தை மகன் ஆவார். அவருடன் எங்களுக்கு விரோதம் இல்லை. அவர் என் தந்தையுடன் நல்ல உறவு முறையில்தான் இருந்தார். என் தந்தை 1, 2 பிரதிவாதிகளுடன் 30.03.2000 ம் தேதியில் ஒரு ஆவணம் ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. என் தந்தை காலி மனையாக கிரையம் பெற்றார். அதில் உள்ள கட்டிடங்களை என் சகோதரர்தான் கட்டி முடித்தனர் என்றால் சரியல்ல. என் தந்தை இறக்கும்போது அந்த வீடு மண் சுவர் கட்டி ஓடு போடப்பட்ட வீடாக இருந்தது. தற்போது இரண்டு கான்கீரிட் வீடாக உள்ளது என்றால் சரிதான். அந்த வீடு கட்டி சுமார் 8 வருடங்கள் ஆகிறது. அதை 1, 2 பிரதிவாதிகள் கட்டினார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பொது சொத்தில் வீடு கட்டுவதாக நான் ஆட்சேபிக்கவில்லை என்றால் சரிதான். அது கட்டபட்ட போது எனக்கு தெரியும் என்றால் சரிதான். எவ்வளவு செலவு செய்யப்பட்டது என்று தெரியாது. அதன் மதிப்பு தெரியாது. இரண்டு கட்டிடமும் சேர்த்து மொத்த மதிப்பு ரூ.5 லட்சம் இருக்கும் என்றால் அதுவும் எனக்கு தெரியாது. என் தந்தை 30.03.2000 ம் தேதியில் 1, 2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து ஒரு ஆவணம் எழுதிக் கொண்ட விவரம் எனக்கு தெரியும் என்பதால்தான் நான் அந்த சொத்தில் வீடு கட்டும்போது ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை 30.03.2000 ம் தேதியில் 1, 2 பிரதிவாதிகளுடன் சேர்ந்து ஒரு ஆவணம் எழுதிக் கொண்டு தங்களுடைய தனிச்சொத்தாக அனுபவித்து வந்தார்கள் என்பதால்தான் நான் அந்த சொத்தில் வீடு

கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேல்பகுதியை 2 ம் பிரதிவாதியும், கீழ்பகுதியில் 1ம் பிரதிவாதியும் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள். 4 ம் பிரதிவாதி வழக்குரை சொத்தை கிரையம் பெற்றது எனக்கு தெரியாது. அவர் எதிர்வாதம் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. வழக்குரை சொத்தில் மாரிப்பாண்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நாங்கள் வழக்கு தாக்கல் செய்த நாளுக்கு முன்பிருந்தே அவர் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். என் தந்தை கிரையம் பெற்ற அசல் ஆவணங்கள் என்வசம் இல்லை. யாரிடம் உள்ளது என்று தெரியாது. என் தந்தை 30.03.2000 ம் தேதியன்றே வழக்கு சொத்தின் அசல் ஆவணங்களை 1, 2 பிரதிவாதிகளிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. என் தந்தையின் கிரைய ஆவணங்களை நான் இதுவரை பார்த்ததில்லை என்னிடம் காட்டப்படும் ஆவணங்களைப் பற்றி நான் கூற இயலாது எனக்கு எழுத படிக்கத் தெரியாது. வழக்குரை சொத்தில் நாங்கள் தற்போது அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் நாளில் இல்லை என்றால் சரிதான். 30.04.2000 ம் தேதியில் என் தந்தை இறந்துபோனார் என்றால் ஞாபகமில்லை. எனவே இவ்வழக்கை தாக்கல் செய்யும் காலவரம்பு கடந்து தாக்கல் செய்துள்ளதால் வழக்கு பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. மின் இணைப்பு என் தந்தை பெயரில் இருந்தது. வழக்கு தாக்கல் செய்யும் முன்பே அது 1, 2 பிரதிவாதிகளின் பெயரில் இருந்தது என்றால் சரியல்ல. குடிநீர் இணைப்பு, வீட்டு வரிவிதிப்பு 1, 2 பிரதிவாதிகளின் பெயரிலேயே இருந்து வருகிறது என்றால் சரியல்ல. கடந்த 20 வருடங்களாக நான் மின்இணைப்பு வீட்டு வரி

செலுத்தியதில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து 1, 2, 4 பிரதிவாதிகளுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.03.05 15:25:12 +0530